ISSN : 2455 - 0531
Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com
UAN.TN03D0061112

# இனம்

இனம் இனத்தைச் சேரும்

# பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

# International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:14 ஆகஸ்ட் 2018 Vol. 4 Issue : 14 August 2018



சி.சங்கீதா
பா.ஈஸ்வரன்
ச.கண்ணதாசன்
அரி.வே.விஸ்வேஸ்வரன்
இரா.வசந்தமணி
தி.மல்லிகா
கி.ரேவதி
பா.கலையரசி
அ.மரிய செபஸ்தியான்
சி.அம்சவேணி
சே.முனியசாமி
ஆ.ஈஸ்வரன்
க.பாலாஜி
ந.இராஜேந்திரன்
ம.பாபு
தி.நிரஞ்சனி
இரா.அருணா
சி.சாவித்ரி
அ.அனேஜா
வி.வசந்தா
ப.சண்முகராணி
த.சத்தியராஜ்

Inam ISSN : 2455 - 0531

UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

ஆகஸ்ட் 2018 மலர் : 4 இதழ் : 14
August 2018 Volume IV Issue 14

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்

தொல்காப்பியமும் திருக்குறள் களவியலும்
முனைவர் சி.சங்கீதா | 4

ஐங்குறுநூற்றில் மலர்கள் வருணனை
முனைவர் பா.ஈஸ்வரன் | 9

பத்துப்பாட்டுப் பதிப்புருவாக்கத்தில் உ.வே.சாமிநாதையர்
முனைவர் ச.கண்ணதாசன் | 13

வேதசாத்திரங்களின் கருத்துகள் திருக்குறளின் அடிப்படையில் திரிக்கப்பட்டவையே
அரி.வே.விஸ்வேஸ்வரன் | 18

பழங்காலத் தமிழர் வாழ்வியலும் அறிவியல் பொருட்புலங்களும்
முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 24

புலிகொல் யானை
முனைவர் தி.மல்லிகா | 34

சங்கத் தமிழரின் நிமித்தம் சார்ந்த நம்பிக்கைகள்
கி.ரேவதி | 37

### பக்தி இலக்கியம்

திருமூலரின் இரந்தார்க்கீதல்
முனைவர் பா.கலையரசி | 41


### தற்கால இலக்கியம்

தீர்ந்த சுனை, காய்ந்த பனை, நேர்ந்த வினை - ஒத்திகை விஜய்யின் “மாள்வுறு நாடகம்” : பார்வையாளர் நோக்கு
முனைவர் அ.மரிய செபஸ்தியான் | 45

பெண்மொழியும் பண்பாட்டுக் கூறுகளும்
முனைவர் சி.அம்சவேணி | 54

...

UGC APPROVED JOURNAL NO: 64244




## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


**முதுகுளத்தூர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயரும் அவர்தம் கவிப்புலமையும்**
சே.முனியசாமி | 65

**கிழக்கிந்திய தாந்திரீகப் பாடல்கள்**
முனைவர் ஆ.ஈஸ்வரன் | 78

**பெருங்கற்காலக் கற்பதுக்கைகள் - தொல்லியல் கள ஆய்வு**
முனைவர் க.பாலாஜி | 91

**எட்டிசேரி : பெருங்கற்காலச் சமூகத்தின் வாழ்விடம்**
முனைவர் ந.இராஜேந்திரன் | 108

**காலத்துக்குக் காலம் மாறும் கலைப்பாணிகள்**
முனைவர் ம.பாபு | 115

**பகுப்பாய்வு மெய்யியலில் மொழி : சமகால மெய்யியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு**
திரவியராசா நிரஞ்சினி | 121

**இலக்கணம் கற்றல் முறையில் வரைபடங்களின் பங்கு**
இரா.அருணா | 132

**ஒப்பீட்டு நோக்கில் தமிழ் - தெலுங்கு இலக்கணங்களும் இன்றைய ஆய்வு போக்குகள்**
முனைவர் சி.சாவித்ரி | 138

**தண்டனைக் கொள்கைகளும் அவற்றின் நடைமுறைப் பொருத்தப்பாடும்**
அரியரெத்தினம் - அனேஜா | 148

**வளர்முக நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஏற்படுத்தும் விளைவுகள்**
வினாயகமூர்த்தி - வசந்தா | 163


## கணினித்தமிழ்


**இணையப் பயன்பாட்டுக் கற்றல்வழித் தமிழ் வளர்ச்சி**
முனைவர் ப.சண்முகராணி | 174


## நூல் மதிப்பீடு


**‘ஒடியன்’வழி இருளர்கள் : அறிமுகம்**
த.சத்தியராஜ் | 177


...

மதிப்பிடப்பெற்றது

# சங்கத் தமிழரின் நிமித்தம் சார்ந்த நம்பிக்கைகள்

கி.ரேவதி
தமிழ் உதவிப் பேராசிரியர்,
தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), விழுப்புரம்
revathikrish201990@gmail.com

*Abstract: The present article discusses the thought of Tamilian beliefs.*

நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் மக்களைச் சுற்றிப் படர்ந்திருப்பவை. நம்பிக்கை என்பது நம் நாட்டில் மட்டும் அல்லாமல் ஒவ்வொரு நாட்டிலும் பன்னெடுங்காலமாக வேரூன்றிக் கிடக்கின்றது. அவ்வகையில், தமிழர்களின் பண்பாடு சார்ந்த நம்பிக்கைகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன.

**நிமித்தம்**

நிமித்தம் என்ற சொல்லிற்குக் காரணம், பொருட்டு, அடையாளம் என்ற பொருள்கள் உண்டு. இதனை விரிச்சி என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.

*“வேண்டிய பொருளின் விளைவுநன்கு அறிதற்கு*
*ஈண்டுஇருள் மாலைச் சொல்ஓர்த் தன்று” (புறப். கொளு-2)*

நம்பிக்கை அடிப்படையில் நிமித்தத்தினை நோக்கும்போது சகுனம் பார்த்தல் என்ற பொருளைத் தந்து சிறப்பிக்கின்றது.

சகுனம் அறிவிப்போரையும் சகுனத்தின் பயன்களைக் கூறுவோரையும் நிமித்திகர்கள் என்று கூறுவர். அறிஞர்கள் கருத்துக்கேற்ப நிமித்தம் என்பது நல்ல, தீய சகுனங்களைப் பார்த்தல் என்பது புலனாகின்றது.

**தெய்வ நம்பிக்கை**

சங்க காலம் முதற்கொண்டே தமிழர்களிடம் தெய்வ நம்பிக்கை உள்ளது. உலகம் கடவுளால் காக்கப்படுகிறது என்ற உண்மையை,

*“சேவல்அம் கொடியோன் காப்ப*
*ஏம வைகல் எய்தின்றால் உலகே” (குறுந்.1)*

என்று குறுந்தொகையின் முதற்பாடலே கடவுள் வாழ்த்தோடு தொடங்குகிறது.

தலைவன் களவுக் காலத்தில் சூளுரைத்தல், தலைவிக்கு வரும் காதல் நோய்க்குக் கடவுள் காரணம் என்று நம்புதல், தெய்வங்களின் உறைவிடம் மலை போன்ற செய்திகளின் மூலம் அக்கால மக்களின் தெய்வ நம்பிக்கையை அறியலாம். மேலும்,

*“மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்*
*கொடியோர்த் தெறூஉம்” (குறுந்.87)*

என்ற பாடலில் தெய்வமானது கொடியவரை வருத்தும் என்ற செய்தியும் கூறப்படுகிறது.

**விண்ணியல்**

பண்டைய நாளில் தூரத்தில் இயங்கும் கோளையும், விண்மீன்களையும் கண்டு உணர்ந்து அவற்றின் இயக்கத்திற்கும் மண்ணில் வாழும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

நற்றிணையில் விண்மீனைக் கைதொழுது வணங்கி வந்தனர் என்பதை,

*"மையற விளங்கிய மணிநிற விசும்பின்*

*கைதொழுது மரபின் எழுமீன் போல"* *(நற்.231)*

என்ற அடிகள்வழி, விண்மீனையும் தெய்வமாகத் தொழும் பழக்கம் மக்களிடம் இருந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது.

பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் நட்சத்திரத்தைக் கூட்டம் கூட்டமாக வகுத்து அவை இன்ன இன்ன உருவம் என்று பிரித்தனர். வெள்ளிமீன் தெற்குத்திசை தோன்றினால் மழை பொய்த்துவிடும் என்ற செய்தியை,

**"அலங்கு கதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்**

**இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்"** **(புறம்.35)**

என்ற புறநானூற்று அடிகள் உணர்த்துகின்றன.

பட்டினப்பாலையில் மகம் என்னும் வெண்ணிற விண்மீன் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**"மழை நீங்கிய மாவிசும்பில்**

**மதி சேர்ந்த மகவெண்மீன்**

**உரு கெழு திறல் உயர் கோட்டத்து"** **(பட்டினப்.34-36)**

என்ற அடிகள் நிலவுடன் சேர்ந்து விளங்கும் விண்மீன்களை மக்கள் தொழுது வணங்கினர் என்ற செய்தியை உணர்த்தி நிற்கின்றன.

**பறவைகளின் ஒலி - நிமித்தமாதல்**

தனிமனிதப் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் காலப்போக்கில் உணர்ச்சிப் பெருக்கால் மாறும் தன்மையுடையன. ஆனால் ஒரு சமுதாயத்தின் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் எளிதில் மாற்றத்திற்கு உட்பட்டவை அன்று.

நற்றிணையில் பறவை நிமித்தத்தைக் கூறும் தலைவன் நம் வருகையைக் காக்கை முதலிய புள்ளினங்கள் அவருக்கு அறிவுறுத்தினவோ என்று கூறுவதாகப் பாடலொன்று அமைகின்றது.

*தோள்வழி யாப்ப ஈண்டுநம் வரவினைப்*

*புள்அறி வுறீஇயின கொல்லோ"* *(நற்.161)*

என்ற அடிகள் பறவை ஒலியை நிமித்தமாகக் கொண்டதனை உணர்த்துகின்றன.

**காகம் கரைதல்**

காகம் தம் இல்லத்தருகில் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை இருந்தது. இந்த நம்பிக்கை இன்றும் சிற்றூர்ப்புறங்களில் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

*"பெருந்தோள் நெகிழ்த்த செல்வற்கு*

*விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"* *(குறுந்.210)*

காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கையும் அக்காலத்தில் இருந்தமையை அறிய முடிகிறது.

**விலங்குகளின் ஒலி சகுனமாதல்**

பழந்தமிழர் விலங்குகள் வாயிலாகவும் சகுனம் பார்த்து வந்துள்ளனர். பல்லி, ஓணான், கூகை போன்ற உயிரினங்கள் எழுப்பும் ஓசைக்கும் பலன் உண்டு என்பதை அறிந்துள்ளனர்.

**பல்லிச் சகுனம்**

சங்க இலக்கியத்தில் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி தலைவன் வரும் நாளை ஆவலோடு எதிர்பார்த்து நல்ல பலனை எதிர்நோக்கும்போது பல்லியும் ஓசை எழுப்பி அதற்கு இணக்கமான நல்ல நிமித்தத்தை ஒலிக்கின்றது.

*“முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல்*
*வருவம் என்னும் பருவரல் தீரப்*
*படும்கொல் வாழி நெடுஞ்சுவர்ப் பல்லி’ (நற்.பா.169:1-3)*

வினைமுற்றி மீளும் தலைவனின் வருகையைப் பல்லி தலைவிக்கு அறிவிக்குமெனத் தன் நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறான். அஃறிணை உயிரும் அஃறிணையான பல்லியின் சகுனத்தைப் பார்க்கின்றது.

பன்றியும் பல்லி சகுனம் பார்த்துத் தனக்கு இடையூறு நேரும் என்று குகையில் பதுங்குவதை நற்றிணையில் 98ஆம் பாடலும், 169, 246 ஆகிய பாடல்களும், அகநானூற்றில் 9, 88, 151, 289, 351 ஆகிய பாடல்களும் சகுனத்தை உணர்த்துவதாக அமைகின்றன.

குறுந்தொகையில் ஆண் பல்லி தன் துணையை அழைக்க ஒலி எழுப்பிய செய்தியும் குறிப்பிடப்படுகின்றது.

*“உகிர்நுதி புரட்டும் ஓசை போல*
*செங்காற் பல்லி தன்துணை பயிரும்*
*அம்காற் கள்ளி அம்காடு இறந்தோரே” (குறுந்.16)*

**கட்டுவிச்சி**

குறி கேட்கும் வழக்கம் பண்டைத்தமிழ் மக்களிடம் இருந்து இன்று வரை வழக்கில் இருந்து கொண்டிருக்கின்றது. குறி கூறுகின்றவர்கள் தெய்வத்தின் உதவியினால் உண்மையை அறிந்து உரைக்கின்றனர் என நம்பி வந்தனர். குறி கூறும்போது குலதெய்வத்தை வழிபட்டுக் கூறுகின்ற முறை இருந்திருக்கின்றது.

குறுந்தொகையில் குறி கூறுகின்ற பெண்டிரைக் கட்டுவிச்சி என்று கூறுகின்ற மரபு இருந்திருக்கின்றது.

*“அகவன் மகளே! அகவன் மகளே!*
*மனக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்*
*அகவன் மகளே! பாடுக பாட்டே” (குறுந்.23)*

என்ற அடிகள் தெய்வத்தை அழைத்துப் பாடுகின்ற கட்டுவிச்சி என்ற கருத்தைக் கூறுகின்றன.

**கண்துடித்தல்**

பெண்களுக்கு இடதுகண் துடிப்பதைச் சங்க இலக்கியங்கள் நல்நிமித்தமாகக் கொண்டுள்ளன. கண் துடித்தல் தலைவன் வருகையை உணர்த்தும் நற்குறியாக அமைந்துள்ளது. இதனை,

*“நுண்ணோர் புருவத்த கண்ணும் ஆடும்*

*மயிர்வார் முன்கை வளையும் செறூஉம்" (ஐங்.218)*

என்று ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன.

**சொர்க்கம் - நரகம்**

சொர்க்கம் நரகம் என்ற நம்பிக்கைகள் மக்களிடம் அதிகமாகக் காணப்படுகின்றன. நன்மை செய்தால் சொர்க்கத்திற்குச் செல்லலாம். தீமை செய்தால் நகரத்திற்குச் செல்வார் என்ற ஆழ்ந்த நம்பிக்கை பழந்தமிழரிடம் இருந்ததை இலக்கியங்கள் வழி தெரிந்துக்கொள்ள முடிகின்றது.

தமிழர்கள் மட்டுமின்றி அமெரிக்கர், ஜப்பானியர் போன்ற நாட்டினருக்கும் சொர்க்கம் நரகம் மீது ஆழ்ந்த நம்பிக்கை இருந்துள்ளது. போர்க்களத்தில் வீரர்கள் விழுப்புண் பெற்று மாண்டு போனாலும் அவர்கள் தேவர்கள் உலகத்திற்குச் செல்வர் என்றும் அதுதான் அவர்களுக்குப் புகழ் என்றும் மதிக்கப்பட்டது. வடமோதாங்கிழார் இதனை,

*"கையகத்து உயர்ந்த கன்றுடைப் பல்லான்*
*நிரையொடு வந்த உரையான் ஆகி*
*உரிகளை அரவ மானத் தானே*
*அரிது செல் உலகில் சென்றனன் உடம்பே*
*கானச் சிற்றியாற்று அருங்கரைக் கால்உற்று" (புறம்.260)*

என்கிறார். மேலும் யானைப்படையையுடைய நெடுமாவளவன் தேவர் உலகத்தை அடைந்தான். ஆதலால் வீரமரணமும் சொர்க்கத்தை அடையும் ஒரு வழியாக உள்ளது.

*"கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்*
*தேவர் உலகம் எய்தினன் ஆதலின்" (புறம்.228)*

என்ற புறநானூற்றுப் பாடலும் தேவர் உலகம் பற்றிய செய்தியைக் கூறுகின்றது.

தேவர் உலகம் என்பது சொர்க்கம் ஆகும். தேவர்கள் அமுதம் உண்டு வாழ்பவர்கள் என்றதால் குறுந்தொகையில் தோழி தலைவியிடம் கூறும்போது செவிலித்தாய் தலைவன் வரைவோடு வருவான் என்று கூறுகிறாள். எனவே இந்த நற்சொல்லைக் கூறிய அவள் பெறுதற்கு அரிய அமுதமே உண்ணும் உணவாகக் கொண்ட தேவர்கள் வாழ்கின்ற பெரும் உலகத்தை அடையப் பெறுவாளாக! என வாழ்த்துகிறாள்.

**முடிவுரை**

மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்துவிடுகின்றன. நம்பிக்கையை மூடநம்பிக்கை என்று சொன்னாலும் அவை விளக்க இயலாத தன்மை பெற்று விளங்குகிறது. திருமணச் சடங்குகள், இறப்புப் பற்றிய சடங்குகள் உள்ளிட்ட தமிழரின் வாழ்வியல் சடங்குகள் பெரும்பாலும் அக்கால மக்களின் நம்பிக்கை சார்ந்தே அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**துணைநின்றவை**


- இராசமாணிக்கனார் மா., 2010., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம்,
- நாகராசன்.வி, (உரை.) 2004, குறுந்தொகை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.
- பாலசுப்பிரமணியன் கு.வெ.,(உரை.) 2004புறநானூறு, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.
- புலியூர்க்கேசிகன்(உரை.), 2012, புறப்பொருள் வெண்பாமாலை, சாரதா பதிப்பகம், சென்னை.
- மாணிக்கனார்.அ,(உரை.) 2009, ஐங்குறுநூறு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.